அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது பூம்புகார் தொகுதியில் உள்ள குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே உள்ளது. புதிய கட்டடம் கட்டுவதற்குத் தேவையான அரசு நிலம் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள், "அம்மா திட்டம்" என்கின்ற அற்புதமான திட்டத்தை வருவாய்த் துறையின்மூலமாக அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அத்திட்டத்தின் வாயிலாக, வருவாய்த் துறை அதிகாரிகள் மக்களுடைய இல்லத்திற்கே சென்று, குறைகளைக் கேட்டறிந்து, அவர்களுடைய கோரிக்கைகளை நிவர்த்தி செய்து, மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிற இந்த வேளையிலே, அந்த வட்டாட்சியர் அலுவலகத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கட்டிக் கொடுக்கும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

179—

பள்ளி தரம் உயர்த்துதல்

***23956—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, வேங்கடத்தானூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தங்கப் பதக்கத்தின் மேலே, ஒரு முத்துப் பதித்ததைப் போல” வீற்றிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, வேங்கடத்தானூரிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது தரமுயர்த்த வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு”

என்னும் பொதுமறைப் புலவரின் வைர வரிகளுக்கு இலக்கணமாகத் திகழும் எங்கள் கம்பீரத் தாய், பாரதி கண்ட புதுமைப் பெண், (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய பாரதத்தின் விடிவெள்ளி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

முற்பகல் 11–05

துறையூர் தொகுதிக்குட்பட்ட, துறையூர் ஒன்றியம், வேங்கடத்தானூர் நடுநிலைப் பள்ளியில், மலைவாழ் மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் உள்ளடங்கிய பூனாட்சி, மருவத்தூர், அம்மன்பாளையம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் அதிகம் படிக்கின்றார்கள்; ஆறு, ஏழு, எட்டாம் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர் 105 பேர் படிக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், ஷி.ஷி.கி. திட்டத்தின்கீழ் அந்தப் பள்ளிக்குப் போதுமான மூன்று கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, தயார் நிலையில் உள்ளன; அந்தப் பள்ளிக்கு இடவசதியும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்றவைகள் உள்ளன; அந்தப் பகுதியிலே

கல்விப் புரவலர்கள் அதிகமாக உள்ளனர்; கிட்டத்தட்ட 1,50,000 ரூபாய் நிதி இருப்பு வைத்துள்ளனர். மேலும், அப்பகுதி மலைவாழ் மக்கள் அதிகமாக பச்சைமலை மலையடிவாரத்தில் இருப்பதனாலும், பேருந்து வசதி இல்லாத காரணத்தினாலும், மாணவ, மாணவியர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு பள்ளிக்குச் செல்ல இயலவில்லை. எனவே, அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்யுமாறு தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமெனில், 5 கி.மீ. சுற்றளவில் ஏதேனும் ஒரு அரசு உயர்நிலைப் பள்ளியோ, அரசு மேல்நிலைப் பள்ளியோ இல்லாமல் இருத்தல் வேண்டும். தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பி இருக்கிற பள்ளியிலிருந்து, 4 கி.மீ. தொலைவிலுள்ள செங்காட்டுப்பட்டியில் ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி அமைந்திருக்கிறது. அவற்றோடுமாத்திரமல்ல, மக்களுடைய பங்குத் தொகையாக 1 இலட்சம் ரூபாய் இன்னும் செலுத்தப்படவில்லை; கருத்துருவும் அனுப்பப்படவில்லை. இருப்பினும், இதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய முறையில் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளி அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை, உடனடியாகச் செலுத்த ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகப்படியான மலைவாழ் மக்கள் வாழுகின்ற பகுதியாக இருப்பதாலும்—1 கி.மீ. தூரம்தான் குறைவு—பேருந்து வசதியும் இல்லாத காரணத்தினாலும், அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும், கண்ணனூர்

பஞ்சாயத்திற்குட்பட்ட, கொத்தம்பட்டி நடுநிலைப் பள்ளியையும், நாகலாபுரம் நடுநிலைப் பள்ளியையும் தரம் உயர்த்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கனிவுடன் பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதிய கல்லூரிகள் துவங்குதல், கல்லூரிகளுக்குக் கட்டட வசதி மற்றும் பல்கலைக்கழகங்களில் சுவாமி விவேகானந்தர் ஆய்வு மையம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—இன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தின் வளமான பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாக விளங்கும் மனித வள*